# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின்
# வர்த்தமானப் பத்திரிகை

## *2022 ஆம் ஆண்டு சனவரி மாதம் 13 ஆம் திகதிய*
## பகுதி II இற்குக் குறைநிரப்பி

*(2022.01.19 ஆம் திகதியன்று வெளியிடப்பட்டது)*


# கலஹா பத்ரவதி தேசிய பிக்குமார் பராமரிப்பு நிலைய நம்பிக்கைப்பொறுப்பு

**கலஹா பத்ரவதி தேசிய பிக்குமார் பராமரிப்பு நிலைய நம்பிக்கைப்பொறுப்பு என அழைக்கப்படும் நம்பிக்கைப்பொறுப்பொன்றை தாபிப்பதற்கு ஏற்பாடு செய்வதற்கும் அத்துடன் அதனோடு தொடர்புடைய அல்லது அதன் இடைநேர்விளைவான கருமங்களுக்கு ஏற்பாடு செய்வதற்குமானதொரு சட்டமூலம்**

*சுகாதார அமைச்சர் அவர்களால் பிரசுரிக்கப்படுமாறு பணிக்கப்பட்டது*


இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்தில் பதிப்பிக்கப்பெற்றது

கொழும்பு 5, அரசாங்க வெளியீட்டலுவலகத்தில் பெற்றுக்கொள்ளலாம்

**விலை : ரூபா 30.00** **தபாற் செலவு : ரூபா 15.00**

*இவ்வர்த்தமானியின் குறைநிரப்பியை* www.documents.gov.lk *எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.*

## கலஹா பத்ரவதி தேசிய பிக்குமார் பராமரிப்பு நிலைய நம்பிக்கைப்பொறுப்பு

*ச.வ.- ஓ. 26/2016*

**கலஹா பத்ரவதி தேசிய பிக்குமார் பராமரிப்பு நிலைய நம்பிக்கைப்பொறுப்பு என அழைக்கப்படும் நம்பிக்கைப் பொறுப்பொன்றை தாபிப்பதற்கு ஏற்பாடு செய்வதற்கும்; அத்துடன் அதனோடு தொடர்புடைய அல்லது அதன் இடைநேர்விளைவான கருமங்களுக்கு ஏற்பாடு செய்வதற்கு மானதொரு சட்டம்**

முன்னுரை

"கலஹா பத்ரவதி தேசிய பிக்குமார் பராமரிப்பு நிலைய நம்பிக்கைப் பொறுப்பு" என அழைக்கப்படுவதும் அறியப்படுவதுமான நம்பிக்கைப்பொறுப்பொன்று, நோய்வாய்ப்பட்டு மற்றும் உதவியற்று இருக்கின்ற பிக்குமார்களுக்கான பிக்குமார் பராமரிப்பு நிலையமொன்றைத் தாபித்துப் பேணிவரும் நோக்கத்துக்காக 2003, பெப்புருவரி 7 ஆந் தேதிய பகிரங்க நம்பிக்கைப்பொறுப்பொன்றி னால் இதற்கு முன்னர் தாபிக்கப்பட்டுள்ளதாதலாலும் :

அத்துடன் சொல்லப்பட்ட நம்பிக்கைப்பொறுப்பு உரியமுறையில் செயற்படுவதில்லை என்றும், ஆகவே சொல்லப்பட்ட கலஹா பத்ரவதி தேசிய பிக்குமார் பராமரிப்பு நிலையத்தின் முறையான நிருவாகம் இல்லாமை மற்றும் சொல்லப்பட்ட கலஹா பத்ரவதி தேசிய பிக்குமார் பராமரிப்பு நிலையத்தின் முறையான செயற்பாட்டுக்காக ஒழுங்குமுறையானதும் போதியளவானதுமான நிதியளிப்பு இல்லாமை ஆகியனவுட்பட, பல்வேறு காரணங்களினால் சொல்லப்பட்ட கலஹா பத்ரவதி தேசிய பிக்குமார் நிலையத்தைப் பராமரித்தல் சாத்தியமற்றது என்றும் தற்போது வெளிப்படையாகத் தெரியவந்துள்ளதாதலாலும்:

அத்துடன் நோய்வாய்ப்பட்டு மற்றும் உதவியற்று இருக்கின்ற பிக்குமார்களின் நலனுக்காக, சொல்லப்பட்ட கலஹா பத்ரவதி தேசிய பிக்குமார் நிலையத்தின் குறிக்கோள்களை எய்துவதற்கென கலஹா பத்ரவதி தேசிய பிக்குமார் பராமரிப்பு நிலைய நம்பிக்கைப் பொறுப்பு என அழைக்கப்படும் நம்பிக்கைப்பொறுப்பொன்றைத் தாபிப்பதற்கு ஏற்பாடு செய்வதற்கும் அத்துடன் அதனோடு தொடர்புடைய அல்லது அதன் இடைநேர்விளைவான கருமங்க ளுக்கு ஏற்பாடு செய்வதற்குமான சட்டவாக்கத்தை இயற்றுவது அவசியமாக வந்துள்ளதாதலாலும்:

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் பாராளுமன்றத்தினால் பின்வருமாறு சட்டமாக்கப்படுவதாகுக :-

**சுருக்கப் பெயர்**

**1.** இச்சட்டம், 2022 ஆம் ஆண்டின் ஆம் இலக்க, கலஹா பத்ரவதி தேசிய பிக்குமார் பராமரிப்பு நிலைய நம்பிக்கைப் பொறுப்புச் சட்டம் என எடுத்துக்காட்டப்படலாம்.

**கலஹா பத்ரவதி தேசிய பிக்குகள் பராமரிப்பு நிலைய நம்பிக்கைப் பொறுப்பை தாபித்தல்**

**2.** (இதனகத்துப்பின்னர் ''நம்பிக்கைப்பொறுப்பு'' எனக் குறிப்பீடுசெய்யப்படும்) கலஹா பத்ரவதி தேசிய பிக்குமார் பராமரிப்பு நிலைய நம்பிக்கைப்பொறுப்பென அழைக்கப்பட வேண்டிய நம்பிக்கைப்பொறுப்பொன்று தாபிக்கப்படுதல் வேண்டும்.

(2) நம்பிக்கைப்பொறுப்பு, (1) ஆம் உப்பிரிவினால் அதற்கென்று குறித்தளிக்கப்பட்ட பெயரைக்கொண்ட கூட்டிணைக்கப்பட்ட குழுவாகவிருத்தலும் இடையறாவழியுரிமையைக் கொண்டிருத்தலும் வேண்டுமென்பதுடன் அப்பெயர்கொண்டு அது வழக்குத் தொடுக்கப்படலாமென்பதுடன் அதற்கெதிராக வழக்குத் தொடுக்கவும்படலாம். அத்துடன் பொது இலச்சினையொன்றை வைத்திருக்கவும் பயன்படுத்தவும் அதனை மாற்றவும் முழுத் தத்துவமும் அதிகாரமும் கொண்டதாய் இருத்தலும் வேண்டும்.

**நம்பிக்கைப் பொறுப்பின் குறிக்கோள்**

**3.** நம்பிக்கைப்பொறுப்பின் குறிக்கோளானது, (இதனகத்துப் பின்னர் ''பிக்குமார் பராமரிப்பு நிலையம்'' எனக் குறிப்பீடு செய்யப்படும்) கலஹா பத்ரவதி தேசிய பிக்குமார் பராமரிப்பு நிலையத்தில் நோய்வாய்ப்பட்டு மற்றும் உதவியற்றிருக்கின்ற பிக்குமார்களுக்கான தங்குமிடம் மற்றும் பராமரிப்பை வசதிப் படுத்துவதாக இருத்தல் வேண்டும்.

**நம்பிக்கைப் பொறுப்பின் பணிகள்**

**4.** பின்வருவன நம்பிக்கைப்பொறுப்பின் பணிகளாகும் :-

(அ) நோய்வாய்ப்பட்டு மற்றும் உதவியற்றிருக்கின்ற பிக்குமார்களுக்காக கலஹா பத்ரவதி தேசிய பிக்குமார் பராமரிப்பு நிலையத்தைப் பேணுதல், அத்தகைய நிலைமைகளின்மீதும் 8 ஆம் பிரிவினால் விதித்துரைக்

கப்பட்டவாறான கட்டளைக்கற்களின் மீதும் பிக்குமார் பராமரிப்பு நிலையத்தில் நோய்வாய்ப்பட்ட மற்றும் உதவியற்றிருக்கின்ற பிக்குமார்களைத் தங்க வைத்தல்;

(ஆ) பிக்குமார் பராமரிப்பு நிலையத்தில் வதிகின்ற நோய் வாய்ப்பட்ட பிக்குமார்களுக்கு நாளாந்த தேவைகளுட்பட அவசியமான எல்லாவற்றையும் வழங்குதல் மற்றும் மருந்துகளையும் மருத்துவச் சிகிச்சையையும் பெற்றுக் கொள்வதனை வசதிப்படுத்தல்;

(இ) பிக்குமார் பராமரிப்பு நிலையத்தில் வதிகின்ற பிக்குமார்களின் உளஆரோக்கியத்தை சீராக்கும் நோக்குடன் அப்பிக்குமார்களுக்காக தியான நிகழ்ச்சிகளையும் வேறு பௌத்த நிகழ்ச்சிகளையும் ஒழுங்குசெய்தல் மற்றும் நடாத்துதல்; அத்துடன்

(ஈ) வதிகின்ற பிக்குமார்களின் பௌத்த சமயம் பற்றிய அறிவை சீராக்குவதனையும் புதுப்பிப்பதனையும் வசதிப் படுத்துவதற்கென நூலகமொன்றைப் பேணுதல்.

நம்பிக்கைப் பொறுப்பின் முகாமைச் சபை

**5**. (1) நம்பிக்கைப்பொறுப்பின் நிருவாகம், முகாமைத்துவம் மற்றும் அலுவல்களின் கட்டுப்பாடு (இதனகத்துப்பின்னர் "சபை" எனக் குறிப்பீடுசெய்யப்படும்) முகாமைச் சபைக்கு உரித்தாக்கப் படுதல் வேண்டும்.

(2) சபை, பின்வரும் உறுப்பினர்களைக் கொண்டிருத்தல் வேண்டும்:-

(அ) பின்வரும் பதவிவழி உறுப்பினர்கள்:-

(i) சுகாதாரம் என்னும் விடயம் குறித்தளிக்கப்பட்ட அமைச்சரின் அமைச்சுச் செயலாளர் அல்லது மேலதிக செயலாளர் என்னும் பதவி வரிசைக்குக் குறையாத அவரது பிரதிநிதி;

(ii) புத்தசாசனம் என்னும் விடயம் குறித்தளிக்கப்பட்ட அமைச்சரின் அமைச்சுச் செயலாளர் அல்லது மேலதிக செயலாளர் என்னும் பதவி வரிசைக்குக் குறையாத அவரது பிரதிநிதி;

(iii) சமூகசேவைகள் என்னும் விடயம் குறித்தளிக்கப்பட்ட அமைச்சரின் அமைச்சுச் செயலாளர் அல்லது மேலதிக செயலாளர் என்னும் பதவி வரிசைக்குக் குறையாத அவரது பிரதிநிதி;

(iv) நிதி என்னும் விடயம் குறித்தளிக்கப்பட்ட அமைச்சரின் அமைச்சுச் செயலாளர் அல்லது மேலதிக செயலாளர் என்னும் பதவி வரிசைக்குக் குறையாத அவரது பிரதிநிதி;

(v) பௌத்த அலுவல்கள் திணைக்களத்தின் ஆணையாளர் தலைமையதிபதி அல்லது அவரது பிரதிநிதி;

(vi) தலதாமாளிகையின் தியவதன நிலமே அல்லது அவரது பிரதிநிதி;

(vii) பகிரங்க நம்பிக்கைப்பொறுப்பாளர் அல்லது அவரது பிரதிநிதி; அத்துடன்

(ஆ) (இதனகத்துப்பின்னர் “நியமிக்கப்பட்ட உறுப்பினர்கள்” எனக் குறிப்பீடுசெய்யப்படும்) அமைச்சரினால் நியமிக்கப்பட்ட பின்வரும் உறுப்பினர்கள்:-

(i) அமைச்சுக்கான செயலாளருடனான கலந்தாலோசனையுடன் அமைச்சரினால் நியமிக்கப்பட்ட நிருவாகம் மற்றும் கணக்கியலில் அறிவையும் அனுபவத்தையும் கொண்டுள்ள இரு உறுப்பின்கள்;

(ii) *மல்வத்து, அஸ்கிரி, அமரபுர மற்றும் இராமன்ய பிரிவுகளைப் பிரதிநிதித்துவப்படுத்துவதற்கென அத்தகைய பிரிவுகளின் மகாநாயக்க தேரர்களினால் பெயர்குறித்து நியமிக்கப்பட்ட நான்கு பிக்குமார்கள், அவர்களுள் ஒருவர் சபையின் தவிசாளராக நியமிக்கப்படுதல் வேண்டும்;*

(iii) *கலஹா பத்ரவதி கோயிலின் பரிபாலன சபைத் தலைவர்.*

*(3) பதவிவழி உறுப்பினர் என்ற தன்மையில் சபையின் உறுப்பினரொருவராக வந்துள்ள எவரேனுமாள், எந்தப் பதவியின் பயனைக்கொண்டு சபையின் உறுப்பினரொருவராக உள்ளாரோ அந்தப் பதவியை அவர் வகிக்கும்வரை பதவிவிகித்தல் வேண்டும்.*

*(4) சபையின் எவரேனும் நியமிக்கப்பட்ட உறுப்பினர் பதவிவிலகுதல், இறப்பு அல்லது பதவியிலிருந்து அகற்றப்படுதல் மூலம் அவரது பதவியில் வெற்றிடமொன்று ஏற்பட்டாலொழிய, நியமனத்தேதியிலிருந்து மூன்று ஆண்டுகளுக்குப் பதவிவகித்தல் வேண்டும். பதவியிலிருந்து அகற்றுதல்மூலம் தவிர வேறு வகையாக எவரேனும் உறுப்பினரின் பதவிக்காலம் முடிவடைவதற்குள்ள விடத்து அவர் மீள்நியமனத்துக்குத் தகவுடையவராதல் வேண்டும். அத்தகைய மீள்நியமனம் தொடர்ச்சியானதாக இருப்பினுஞ்சரி அவ்வாறல்லாது இருப்பினுஞ்சரி, மேலுமொரு பதவிக்காலத்தைவிட அதிகமாகவிருத்தலாகாது.*

*(5) எவரேனும் நியமிக்கப்பட்ட உறுப்பினரின் இறப்பு, பதவி விலகுதல் அல்லது பதவியிலிருந்து அகற்றப்படுதல் காரணமாக பதவிவெற்றிடமொன்று ஏற்படும் பட்சத்தில், அமைச்சர் (2) ஆம் உட்பிரிவின் (ஆ) என்னும் பந்திக்கமைய, அத்தகைய வெற்றிடத்தை நிரப்புவதற்கு வேறோராளை நியமித்தல் வேண்டுமென்பதுடன் அத்தகைய ஆள், எந்த உறுப்பினரைப் பின்னுறுகின்றாரோ அந்த உறுப்பினரின் முடிவுறாதெஞ்சியுள்ள பதவிக்காலப்பகுதிக்கு பதவிவகித்தல் வேண்டும்.*

(6) சுகயீனம், உடற்றகுதியீனம், இலங்கையில் இல்லாமை அல்லது வேறு ஏதேனும் காரணமாக மூன்று மாதங்களைவிடக் குறையாத காலத்துக்கு சபையின் உறுப்பினரொருவர் என்றவாறாக தனது கடமைகளையும் பணிகளையும் நிறைவேற்றுவதற்கு தற்காலிகமாக இயலாதிருக்கும் எவரேனும் நியமிக்கப்பட்ட உறுப்பினர், அதுபற்றி அமைச்சருக்கு எழுத்தில் அறிவித்தல் வேண்டும். அத்தகைய சந்தர்ப்பத்தில் அமைச்சர் (2) ஆம் பிரிவின் ஏற்பாடுகளைக் கருத்திற் கொண்டு, அத்தகைய உறுப்பினரின் இடத்தில் செயற்படுத்து வதற்கென வேறோராளை நியமித்தல் வேண்டும்.

உறுப்பின ரொருவராக இருப்பதற்கான தகைமையீனங் கள்

**6**. எவரேனுமாள் -

(அ) அத்தகைய ஆள் பாராளுமன்றத்தின் அல்லது மாகாணசபையொன்றின் அல்லது ஏதேனும் உள்ளூரதி காரசபையின் உறுப்பினரொருவராக இருந்தால் அல்லது வந்தால்;

(ஆ) அத்தகைய ஆள் இலங்கையில் அல்லது வேறு ஏதேனும் நாட்டில் வலுவிலுள்ள ஏதேனும் சட்டத்தின் கீழ் சித்தசுவாதீனமற்றவராகக் காணப்பட்டால் அல்லது காணப்பட்டவராக வெளிப்படுத்தப்பட்டால்;

(இ) அத்தகைய ஆள் இலங்கையில் அல்லது வேறு ஏதேனும் நாட்டில் ஏதேனும் சட்டத்தின் கீழ் கடனிறுக்கவகையற்ற ஒருவராக அல்லது வங்கி முறிந்த ஒருவராக வெளிப்படுத்தப்பட்டுள்ள ஆளொருவராகவும் பெறுப்பு விடுவிக்கப்படாத கடனிறுக்கவகையற்றவராக அல்லது வங்கிமுறிந்தவராகவும் இருந்தால்;

(ஈ) அத்தகைய ஆள் இலங்கையில் அல்லது வேறு ஏதேனும் நாட்டில் மறியற்றண்டனை ஒன்றுக்கு உட்படுத்தப்பட்டுக் கொண்டிருந்தால் அல்லது உட்படுத்தப்பட்டிருந்தால்,

அவர், நியமிக்கப்படுவதற்கு அல்லது சபையின் உறுப்பின ரொருவராகத் தொடர்ந்திருப்பதற்கு தகைமையற்றவராக இருத்தல் வேண்டும்.

*சபையின் தத்துவங்கள்*

**7.** சபையானது, இச்சட்டத்தின் அல்லது எழுத்திலான வேறேதேனும் சட்டத்தின் ஏற்பாடுகளுக்கமைய, பின்வரும் தத்துவங்களைக் கொண்டிருத்தல் வேண்டும் :-

(அ) உள்நாட்டு மூலங்களில் இருந்தாயினுஞ்சரி வெளிநாட்டு மூலங்களில் இருந்தாயினுஞ்சரி, அசைவுள்ள மற்றும் அசைவற்ற மானியக்கொடைகளையும் கொடைகளையும் நன்கொடைகளையும் பெறுவதற்கும்:

ஆயின், சபையானது நம்பிக்கைப்பொறுப்புக்குச் செய்யப்பட்ட எல்லா வெளிநாட்டு மானியக் கொடைகள், கொடைகள் அல்லது நன்கொடைகள் தொடர்பில் வெளிநாட்டு மூலவளங்கள் திணைக்களத்தின் எழுத்திலான முன்னங்கீகாரத்தைப் பெற்றுக்கொள்ளுதல் வேண்டும்;

(ஆ) இச்சட்டத்தினால் அல்லது ஏதேனும் கொள்வனவு, கொடை, மானியக்கொடை, இறுதிவிருப்பாவணக் கையளிப்பு என்பவற்றின் பயனைக்கொண்டு அல்லது வேறுவகையாக நம்பிக்கைப்பொறுப்புக்கு உரித்தாக வரக்கூடிய ஏதேனும் அசைவுள்ள அல்லது அசைவற்ற ஆதனத்தைக் கொள்ளுவதற்கு அல்லது வைத்திருப்பதற்கு மற்றும் இச்சட்டத்தின் நோக்கத்துக்காக நம்பிக்கைப் பொறுப்பு எந்த ஆதனத்துக்கு உரித்தாகவரக்கூடுமோ அந்த ஏதேனும் ஆதனத்தை விற்பதற்கு, ஈடுவைப்பதற்கு, குத்தகைக்குவிடுவதற்கு, அளிப்பதற்கு, உரித்து மாற்றுவதற்கு, விருப்பாவண நன்கொடையளிப்பதற்கு, குறித்தளிப்பதற்கு, கொடுத்துமாற்றுவதற்கு அல்லது வேறு வகையாகக் கையுதிர்ப்பதற்கு;

(இ) நம்பிக்கைப்பொறுப்பின் தத்துவங்களையும் கடமைகளையும், பணிகளையும் பிரயோகிப்பதற்கும், புரிவதற்கும், நிறைவேற்றுவதற்கும் அவசியமாகக்கூடியவாறான அத்தகைய எல்லா ஒப்பந்தங்களையும், உடன்படிக்கைகளையும், ஒன்றில் நேரடியாக அல்லது அதற்கென

சபையினால் அதிகாரமளிக்கப்பட்ட அலுவலர்கள், ஊழியர்கள் மற்றும் முகவர்கள் ஊடாக செய்து கொள்வதற்கும், புரிவதற்கும்; அத்துடன்

(ஈ) சபையினால் விதத்துரைக்கப்படக்கூடியவாறான ஏதேனும் வங்கியில் கணக்குகளைத் திறப்பதற்கு, தொழிற் படுத்துவதற்கு மற்றும் மூடுவதற்கு.

பிக்குமார்களின் தங்குமிடம் முதலியன

**8**. பிக்குமார் பராமரிப்பு நிலையத்தில் பிக்குமார்களைத் தங்க வைத்தல் மற்றும் அத்தகைய பிக்குமார்களைக் கவனித்தலுக்கான நிபந்தனைகளும் கட்டளைக்கற்களும் ஒழுங்குவிதிகளினால் விதித்துரைக்கப்பட்டவாறாக இருத்தல் வேண்டும்.

ஆதனத்தை வைத்திருப்பதற்கு நம்பிக்கைப் பொறுப்புக்குள்ள தத்துவம்

**9**. நம்பிக்கைப்பொறுப்பு ஏதேனும் கொள்வனவு, மானியக் கொடை, கொடை, இறுதிவிருப்பாவணக் கையளிப்பு அல்லது வேறுவகையாக அதற்கு உரித்தாகவரக்கூடிய ஏதேனும் அசைவுள்ள அல்லது அசைவற்ற ஆதனத்தை எடுப்பதற்கும் வைத்திருப்பதற்கும் சட்டப்படி இயலுமையுள்ளதாக இருத்தல் வேண்டுமென்பதுடன் அத்தகைய எல்லா ஆதனங்களும் இச்சட்டத்தின் நோக்கத்துக்காக நம்பிக்கைப்பொறுப்பினால் வைத்திருக்கப்படுதலும் வேண்டும்.

சபையின் கூட்டங்கள்

**10**. (1) சபையின் கூட்டங்கள் ஆகக்குறைந்தது மூன்று மாதங்களுக்கு ஒரு தடவையேனும் நடைபெறுதல் வேண்டும்.

(2) தவிசாளர், அவர் சமுகமளித்திருப்பின், சபையின் ஒவ்வொரு கூட்டத்திலும் தலைமைதாங்குதல் வேண்டும். சபையின் ஏதேனும் கூட்டத்துக்கு தவிசாளர் வருகைதராதிருந்தால் அத்தகைய கூட்டத்துக்கு சமுகளித்திருக்கும் உறுப்பினர்கள் அத்தகைய கூட்டத்தில் தலைமைதாங்குவதற்கென அவர்களிலிருந்து உறுப்பினர் ஒருவரைத் தெரிவுசெய்தல் வேண்டும்.

(3) சபையின் ஏதேனும் கூட்டத்துக்கான கூட்டநடப்பெண் ஒன்பது உறுப்பினர்களாதல் வேண்டும்.

(4) ஏதேனும் கூட்டத்தில் வாக்குகள் சமமாகவிருப்பின், தவிசாளர் அல்லது அத்தகைய கூட்டத்துக்கு தலைமைதாங்கும் உறுப்பினர் அவரது வாக்குடன் சேர்த்து மேலதிகமாக அறுதியிடும் வாக்கொன்றையும் கொண்டிருத்தல் வேண்டும்.

(5) சபை, இச்சட்டத்தின் ஏற்பாடுகளுக்கமைய, அதனது கூட்டங்கள் மற்றும் அதன் அலுவல்களைக் கொண்டுநடாத்துதல் தொடர்பில் பின்பற்றப்படவேண்டிய நடவடிக்கைமுறையை ஒழுங்கு படுத்தலாம்.

(6) சபையின் செயல், முடிவு அல்லது நடவடிக்கை எதுவும், அதன் உறுப்பினர்களிடையே வெற்றிடமொன்று இருப்பதன் காரணமாக மட்டும் அல்லது அதன் எவரேனும் உறுப்பினரின் நியமனத்தில் ஏதேனும் குறைபாடு இருப்பதன் காரணமாக மட்டும் செல்லுபடியற்றதானதாகவிருக்கும் எனக் கருதப்படுதலாகாது.

சபையின் கூட்டங்களுக்கு வருகை தருவதற்கான ஊதியம்

**11**. சபையின் உறுப்பினர்களுக்கு நிதி என்னும் விடயம் குறித்தளிக்கப்பட்ட அமைச்சரின் ஒருப்பாட்டுடன் அமைச்சரினால் தீர்மானிக்கப்படக்கூடியவாறாக, சபையின் கூட்டங்களுக்கு வருகை தருவதற்கான அத்தகைய ஊதியம் செலுத்தப்படலாம்.

மதியுரைக்குழு

**12**. பிக்குமார் பராமரிப்பு நிலையத்துடன் தொடர்புடைய கருமங்கள் பற்றி சபைக்கு மதியுரையளிப்பதற்கு மல்வத்து, அஸ்கிரி, அமரபுர மற்றும் இராமன்ய பிரிவுகளின் மகாநாயக்க தேரர்களை உள்ளடக்கிய மதியுரைக் குழுவொன்று இருத்தல் வேண்டும்.

கலஹா பத்ரவதி தேசிய பிக்குமார் பராமரிப்பு நிலைய நம்பிக்கைப் பொறுப்பு நிதியத்தைத் தாபித்தல்

**13**. (1) (இதனகத்துப்பின்னர் ''நிதியம்'' எனக் குறிப்பீடு செய்யப்படும்) கலஹா பத்ரவதி தேசிய பிக்குமார் பராமரிப்பு நிலைய நம்பிக்கைப்பொறுப்பு நிதியம் எனவழைக்கப்படும் நிதியமொன்று தாபிக்கப்படுதல் வேண்டும். நிதியத்தின் முகாமைத்துவம், நிருவாகம், கட்டுப்பாடு மற்றும் தொழிற்பாடு சபைக்கு உரித்தாக் கப்படுதல் வேண்டும்.

(2) பின்வருவன நிதியத்துக்குச் செலுத்தப்படுதல் வேண்டும்:-

(அ) நிதியத்தின் குறிக்கோள்களை நிறைவேற்றும் நோக்கத்துக்காக காலத்துக்குக்காலம் பாராளுமன்றத்தினால் குறித்தொதுக்கப்பட்ட அத்தகைய பணத் தொகைகள்;

(ஆ) 7 (2) (அ) என்னும் பிரிவுக்கமைய, நிதியத்தின் குறிக்கோள்களை எய்துவதற்கு இலங்கையிலிருந்து அல்லது வெளியிலிருந்து காசாக அல்லது பொருளாக ஏதேனும் மானியக்கொடை, கொடை அல்லது நன்கொடை

(3) இச்சட்டத்தின்கீழான அதன் தத்துவங்களையும், கடமைகளையும், பணிகளையும், பிரயோகிக்கையிலும், நிறைவேற்றுகையிலும், புரிகையிலும் நம்பிகைப்பொறுப்பினால் உறப்பட்ட செலவினங்களைக் கொடுத்துத் தீர்ப்பதற்குத் தேவைப்படுத்தப்பட்ட அத்தகைய எல்லா பணத்தொகைகளும் நிதியத்திலிருந்து செலுத்தப்படுதல் வேண்டும்.

**14.** (1) நம்பிக்கைப்பொறுப்பு, அதன் பணிகளை வினைத்திறனாக நிறைவேற்றுதற்கு அவசியமெனக் கருதுகின்றவாறாக, அத்தகைய எண்ணிக்கையிலான அலுவலர்களையும் ஊழியர்களையும் நியமிக்கலாம்.

நம்பிக்கைப் பொறுப்பின் பணியாட் தொகுதியினரை நியமித்தல்

(2) ஓராம் உட்பிரிவின்கீழ் நியமிக்கப்பட்ட அலுவலர்கள் மற்றும் ஊழியர்கள் தொடர்பில் நம்பிக்கைப் பொறுப்பானது-

(அ) அத்தகைய அலுவலர்கள் மற்றும் ஊழியர்கள்மீது ஒழுக்காற்றுக் கட்டுப்பாட்டைப் பிரயோகிக்கலாம் அல்லது அவர்களைப் பதவி நீக்கலாம்;

(ஆ) அத்தகைய அலுவலர்களினதும் ஊழியர்களினதும் தொழில் நியதிநிபந்தனைகளைத் தீர்மானிக்கலாம்; அத்துடன்

(ஈ) நிதி என்னும் விடயம் குறித்தளிக்கப்பட்ட அமைச்சருடனான கலந்தாலோசனையுடன் சபையினால் தீர்மானிக்கப்படக்கூடியவாறான அத்தகைய ஊதியத்தை அத்தகைய அலுவலர்களுக்கும் ஊழியர்களுக்கும் செலுத்தலாம்.

**பகிரங்க அலுவலர்களை நியமித்தல்**

**15.** (1) சபையின் வேண்டுகோளின்மீது, பகிரங்க சேவையிலுள்ள எவரேனும் அலுவலர், அவ்வலுவலரினதும் பகிரங்க சேவை ஆணைக்குழுவினதும் சம்மதத்துடன் சபையினால் தீர்மானிக்கப்படக்கூடியவாறான அத்தகைய காலப்பகுதிக்காக நம்பிக்கைப் பொறுப்பின் பணியாட்டொகுதிக்கு தற்காலிமாக நியமிக்கப்படலாம் அல்லது அதேபோன்ற சம்மதத்துடன் அத்தகைய பணியாட்டொகுதிக்கு நிரந்தரமாக நியமிக்கப்படலாம்.

(2) பகிரங் சேவையிலுள்ள எவரேனும் அலுவலர் நம்பிக்கைப் பொறுப்பின் பணியாட்டொகுதிக்கு தற்காலிகமாக நியமிக்கப்படுகின்றவிடத்து, அத்தகைய அலுவலருக்கும் அவர் தொடர்பிலும் 1991 ஆம் ஆண்டின் 37 ஆம் இலக்க, தேசிய போக்குவரத்து ஆணைக்குழுச் சட்டத்தின் 14 ஆம் பிரிவின் (2) ஆம் உட்பிரிவின் ஏற்பாடுகள், ஏற்ற மாற்றங்களுடனும், ஏற்புடையனவாதல் வேண்டும்.

(3) பகிரங் சேவையிலுள்ள எவரேனும் அலுவலர் நம்பிக்கைப் பொறுப்பின் பணியாட்டொகுதிக்கு நிரந்தரமாக நியமிக்கப்படுகின்றவிடத்து அத்தகைய அலுவலருக்கும் அவர் தொடர்பிலும் 1991 ஆம் ஆண்டின் 37 ஆம் இலக்க, தேசிய போக்குவரத்து ஆணைக்குழுச் சட்டத்தின் 14 ஆம் பிரிவின் (3) ஆம் உட்பிரிவின் ஏற்பாடுகள், ஏற்றமாற்றங்களுடனும், ஏற்புடையனவாதல் வேண்டும்.

**நிதியாண்டு மற்றும் கணக்குகளின் கணக்காய்வு**

**16.** (1) நம்பிக்கைப்பொறுப்பின் நிதியாண்டு பஞ்சாங்க ஆண்டாதல் வேண்டும்.

(2) சபையானது நம்பிக்கைபொறுப்பின் வருமானமும் செலவினமும் பற்றிய முறையான கணக்குப் புத்தகங்களை வைத்திருக்கச் செய்தல் வேண்டும்.

(3) பகிரங்க கூட்டுத்தாபனங்களினது கணக்குகள் பற்றிய கணக்காய்வுடன் தொடர்புடைய அரசியலமைப்பின் 154 ஆம் உறுப்புரையின் ஏற்பாடுகள் நம்பிக்கைப்பொறுப்பினது கணக்குகளின் கணக்காய்வுக்கு ஏற்புடையனவாதல் வேண்டும்.

**17.** (1) சபை ஒவ்வொரு நிதியாண்டும் முடிவடைவதிலிருந்து ஆறு மாதங்களினுள் ஆண்டுக்கான நம்பிக்கைப்பொறுப்பின் கணக்காய்வு செய்யப்பட்ட கணக்குகளுடன் சேர்த்து, நம்பிக்கைப் பொறுப்பினால் நிறைவேற்றப்பட்ட செயற்பாடுகள் பற்றிய வருடாந்த அறிக்கையொன்றை அமைச்சருக்குச் சமர்ப்பித்தல் வேண்டும். வருடாந்த அறிக்கைகள்

(2) அமைச்சர், வருடாந்த அறிக்கை பெறப்பட்ட தேதியிலிருந்து மூன்று மாதங்களினுள் பாராளுமன்றத்தினால் கவனத்துட் கொள்ளப்படுவதற்காக (1) ஆம் உட்பிரிவில் குறித்துரைக்கப்பட்ட ஆவணங்களுடன் சேர்த்து அத்தகைய அறிக்கையை பாராளுமன்றத் தில் இடுதல் வேண்டும்.

**18.** (1) சபையின் இலச்சினையானது– சபையின் இலச்சினை

(அ) சபையினால் தீர்மானிக்கப்படுதல் வேண்டுமென்ப துடன் சபையினால் தீர்மானிக்கப்படக்கூடியவாறான அத்தகைய முறையில் மாற்றவும்படலாம்;

(ஆ) காலத்துக்காலம் சபையினால் தீர்மானிக்கப்படக் கூடியவாறான அத்தகைய ஆளினால் கட்டுக்காப்பில் இருத்தல் வேண்டும்;

(இ) சபையின் அங்கீகாரத்துடனும் சபையின் தவிசாளர் மற்றும் வேறோர் உறுப்பினரின் முன்னிலையிலும் தவிர ஏதேனும் சாசனத்தில் அல்லது ஆவணத்தில் பொறிக்கப்படுதலாகாது; அவர்கள் சமுகமாயிருந்த னர் என்பதற்கான அத்தாட்சியாக அச்சாசனத்தில் அல்லது ஆவணத்தில் அவர்களது பெயர்களையெழு திக் கையொப்பமிடுதல் வேண்டும்;

(2) சபை அதன் இலச்சினை பொறிக்கப்பட்ட சாசனங்கள் மற்றும் ஆவணங்கள் தொடர்பில் இடாப்பொன்றினைப் பேணுதல் வேண்டும்.

**19.** (1) ஏதேனும் நீதிமன்றத்தின் முன் நம்பிக்கைப் பொறுப்பினால் அல்லது நம்பிக்கைப்பொறுப்புக்கு எதிராகக் கொண்டுவரப்பட்ட ஏதேனும் துடர்ச்சி அல்லது குற்றவழக்கில் நம்பிக்கைப் பொறுப்பினால் உறப்பட்ட ஏதேனும் செலவு நிதியத் தின் பணத்திலிருந்து செலுத்தப்படுதல் வேண்டுமென்பதுடன் ஏதேனும் துடர்ச்சி அல்லது குற்றவழக்கில் இருந்தான செலவுகளை அறவிடுதல்

அத்தகைய துடர்ச்சியில் அல்லது குற்றவழக்கில் நம்பிக்கைப் பொறுப்பினால் அறவிடப்பட்ட ஏதேனும் ஆகுசெலவு நிதியத்துக்கு வரவுவைக்கப்படுதலும் வேண்டும்.

(2) இச்சட்டத்தின்கீழ் அல்லது சபையின் பணிப்பின்மீது சபையின் எவரேனும் உறுப்பினரினால் அல்லது நம்பிக்கைப் பொறுப்பின் எவரேனும் அலுவலரினால் அல்லது ஊழியரினால் செய்யப்படுகின்ற அல்லது செய்யப்படுவதாகக் கருதப்படுகின்ற ஏதேனும் செயல் தொடர்பில் ஏதேனும் நீதிமன்றத்தில் அவருக்கெதிராகக் கொண்டுவரப்பட்ட ஏதேனும் துடர்ச்சியில் அல்லது குற்றவழக்கில் அவரினால் உறப்பட்ட செலவெதுவும், அத்தகைய செயல் நல்லெண்ணத்துடன் செய்யப்பட்டதென நீதிமன்றம் தீர்த்தால், அத்தகைய செலவு அத்தகைய துடர்ச்சியில் அல்லது குற்றவழக்கில் அவரினால் அறவிடப்பட்டாலொழிய நிதியத்திலிருந்து செலுத்தப்படுதல் வேண்டும்.

**20.** (1) அமைச்சர், விதித்துரைக்கப்பட வேண்டுமென இச்சட்டத்தினால் தேவைப்படுத்தப்பட்ட கருமங்களுக்காக அல்லது எக்கருமங்கள் தொடர்பில் ஒழுங்குவிதிகள் ஆக்கப்படவேண்டுமென இச்சட்டத்தினால் அதிகாரமளிக்கப்படுகின்றதோ அக்கருமங்கள் தொடர்பில், மல்வத்து, அஸ்கிரி, அமரபுர மற்றும் இராமன்ய பிரிவுகளின் மகாநாயக்க தேரர்களுடனான கலந்தாலோசனையுடன், ஒழுங்கு விதிகளை ஆக்கலாம். ஒழுங்கு விதிகள்

(2) அமைச்சரினால் ஆக்கப்பட்ட ஒவ்வோர் ஒழுங்குவிதியும் வர்த்தமானியில் வெளியிடப்படுதல் வேண்டுமென்பதுடன், அத்தகைய வெளியீட்டுத் தேதியன்று அல்லது அத்தகைய ஒழுங்கு விதிகளில் குறித்துரைக்கப்படக்கூடியவாறான அத்தகைய பிந்திய தேதியன்று நடைமுறைக்கு வருதலும் வேண்டும்.

(3) அமைச்சரினால் ஆக்கப்பட்ட ஒவ்வோர் ஒழுங்குவிதியும், அது வர்த்தமானியில் வெளியிடப்பட்ட பின்னர் மூன்று மாதங்களினுள் அங்கீகாரத்துக்காகப் பாராளுமன்றத்தின்முன் கொணரப் படுதல் வேண்டும். பாராளுமன்றத்தினால் அவ்வாறு அங்கீகரிக் கப்படாத ஒவ்வோர் ஒழுங்குவிதியும் அத்தகைய அங்கீகாரம் மறுக்

கப்பட்ட அத்தகைய தேதியிலிருந்து, ஆனால் அதன்கீழ் முன்னர் செய்யப்பட்ட எதற்கும் பங்கமின்றி, ஒழிக்கப்பட்டுவிட்டதாகக் கருதப்படுதல் வேண்டும்.

(4) எத்தேதியன்று ஏதேனும் ஒழுங்குவிதிக்கு அவ்வாறு அங்கீகாரம் மறுக்கப்பட்டதோ அத்தேதி பற்றிய அறிவித்தல் வர்த்தமானியில் வெளியிடப்படுதல் வேண்டும்.

விதிகள்

**21.** (1) சபையானது, இச்சட்டத்தினால் ஆக்கப்படவேண்டுமென அதிகாரமளிக்கப்பட்ட எல்லாக் கருமங்க்ள தொடர்பிலும் விதிகளை ஆக்கலாம்.

(2) ஓராம் உட்பிரிவின் ஏற்பாடுகளின் பொதுமைக்குப் பங்கமின்றி, பின்வரும் கருமங்களுள் எல்லாம் தொடர்பிலும் அல்லது எவை தொடர்பிலும் விதிகள் ஆக்கப்படலாம்:-

(அ) நம்பிக்கைப்பொறுப்பின் நிருவாகம் அல்லது முகாமை;

(ஆ) அதன் கூட்டங்களை நடாத்துதல் மற்றும் அதனுடன் தொடர்புடைய கருமங்கள்;

(இ) பிக்குமார் பராமரிப்பு நிலையத்தில் பிக்குமார்களைத் தங்க வைத்தல் மற்றும் பராமரித்தல் தொடர்பிலான நிபந்தனைகளினதும் கட்டளைக்கற்களினதும் மீறுகை தொடர்பில் விசாரணைகளை நடாத்துதல் ; அத்துடன்

(ஈ) பிக்குமார் பராமரிப்பு நிலையத்தினால் ஒழுங்கு செய்யப்பட்ட மற்றும் நடாத்தப்பட்ட நிகழ்ச்சிகள்.

நம்பிக்கைப் பொறுப்பின் அலுவலர்களும் சேவகர்களும் தண்டனைச் சட்டக்கோவை யின் கீழான பகிரங்க சேவகர்களாகக் கருதப்படுதல்

**22.** நம்பிக்கைப்பொறுப்பின் எல்லா அலுவலர்களும் சேவகர்களும் (19 ஆம் அத்தியாயமான) தண்டனைச் சட்டக்கோவையின் கருத்துக்குட்படவும் அதன் நோக்கங்களுக்காகவும் பகிரங்க சேவையாளர்களாகக் கருதப்படுதல் வேண்டும்.

*நம்பிக்கைப் பொறுப்பானது இலஞ்சச் சட்டத்தின் கருத்துக்குட்பட அட்டவணைப் படுத்தப்பட்ட நிறுவனம் ஒன்றாகக் கருதப்படுதல்*

**23.** நம்பிக்கைப்பொறுப்பானது (26 ஆம் அத்தியாயமான) இலஞ்சச் சட்டத்தின் கருதுக்குட்பட அட்டவணைப்படுத்தப்பட்ட நிறுவனமொன்றாகக் கருதப்படுதல் வேண்டும்.

*பொருள் கோடல்*

**24.** சந்தர்ப்பம் வேறுவகையாகத் தேவைப்படுத்தினாலொழிய, இச்சட்டத்தில்–

"பிக்கு" என்பது, (318 ஆம் அத்தியாயமான) பௌத்த அறநிலையங்கள் கட்டளைச் சட்டத்தில் அதற்கெனக் குறித்தளிக்கப்பட்டவாறான அதே பொருளைக் கொண்டிருத்தல் வேண்டும்;

"அமைச்சர்" என்பது, இச்சட்டத்தின் ஏற்பாடுகளினது நடைமுறைப்படுத்தல் எந்த அமைச்சருக்கு குறித்தளிக்கப்பட்டுள்ளதோ அந்த அமைச்சர் எனப் பொருள்படும்.

*ஒவ்வாமை ஏற்படும் விடயத்தில் சிங்கள உரை மேலோங்கி நிற்றல்*

**25.** இச்சட்டத்தின் சிங்கள, தமிழ் உரைகளுக்கிடையே ஏதேனும் ஒவ்வாமை ஏற்படும் பட்சத்தில் சிங்கள உரையே மேலேங்கி நிற்றல் வேண்டும்.